ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# உளவியல் ஓர் அறிவியல்

62

**முனைவர் ஞாபழனிவேலு.,**
இணைப்பேராசிரியர், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.
prof.pazhanivelu@gmail.com

**ஆய்வுநோக்கம்**

உளநூல் அறிஞர்கள் மனித நடத்தையை உற்றுநோக்கி அது பற்றிய கருத்துகளைத் திரட்டி அவற்றை முறையே அறிதல் )Knowing) உணர்தல் )Feeling) விரும்பிச் செய்தல் )Willing) என மூன்றுபெரும் பிரிவுகளில் வகைப்படுத்துகின்றனர்ஒவ்வொன்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து . .ஆராய்ச்சி செய்வதை நோக்கமாகக்கொண்டு இக்கட்டுரை அமைகிறது

**திறவுச்சொற்கள்**

உளவியல், அறிவியல், ஆசிரியர்கள், மாணவர்கள், சமுதாயம், மனவியல், உளவியல் முறைகள்

**முன்னுரை**

உளவியல் மனிதனது நடத்தை பற்றிய அறிவியல் என்றும், நடத்தை என்பதுள் 'அனுபவங்களும்' அடங்கும் என்றும் உளவியளாலர்கள் கூறுகின்றனர்எனினும் ., இன்றும் ஒரு சிலர் உளவியல் முழுமையான ஓர் அறிவியலாக வளர்ந்துள்ளதா அல்லது அறிவியல் என்னும் விளக்கம் அதற்கு முழு அளவில் பொருந்தாதா என்னும் சர்ச்சையில் ஈடுபட்டுள்ளனர்இக்கட்டத்தில் . ஒரு பொருள் பற்றி .இப்பிரச்சினைகளை இரண்டு கண்ணோட்டங்களில் பார்க்கலாம், உண்மையான செய்திகளைத் தொகுத்து முறைப்படுத்தி விருப்பு, வெறுப்பு அற்ற நடுநிலைமையுடன் ஆராய்ச்சி செய்து கண்ட முடிவுகள் உண்மைகள் என பிறகும் உணரும் வகையில் மெய்ப்பித்துக் காட்டும் செயலே அறிவியலாகும்) ஆகவே .1) உற்றுநோக்கல் )ii) கருத்துகளைத் திரட்டுதல், (III) அவற்றை வகைப்படுத்துதல், (iv) ஆராய்தல், (v) உண்மைகளைக் கண்டறிதல்,(vi) அவற்றைப் பிறரும் எற்றுக் கொள்ளுமாறு நிலைநாட்டுதல் என்பன சிறப்புக் கொள்கைகளாகும் .இவையாவும் உளவியலுக்கும் பொருந்தி உள்ளன.

**உளவியலும் சில அறிவியல் துறைகளும்**

உளவியல் மனிதனது நடத்தை, அனுபவங்கள் ஆகியன பற்றி ஆராயும் ஓர் அறிவியல் என்னும்போது, அது வேறு சில அறிவியல் பிரிவுகளுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிக் சிறிது அறிந்து கொள்வது அதன் தன்மையை மேலும் தெளிவுபடுத்த உதவுகின்றன. உளவியல், உயிரியல், சமூகவியல் துறைகளுடனும் )Bio-Social) இணைந்தது என்பதை நாம் அறிந்ததாகும்இன்று எந்த ஓர் அறிவியலும் தனித்து வளர்வது என்பது இயலாத . ) அறிவு என்பது ஒரு முழுமையாதலால் பல அறிவியல் துறைகளின் இணைந்த முயற்சி .ஒன்றுInter-Disciplinary Approach) வேண்டும் என்பது அறிவியல் வல்லுநர்களால் வலியுறுத்தப்படுகிறது . உளவியல் பிற அறிவுத்துறைகளில் பயன்படுத்தப்படும் ஆராய்ச்சி முறைகளைப் .பயன்படுத்துகிறது பரிசோதனை முறையும் புள்ளியியல் முறையும் அறிவியலுக்குரிய சிறப்பு முறைகளாகும்அவை உளவ .ியலிலும் பயன்படுகின்றனஉளவியல் ஆராய்ச்சிக்கும் தக்க . .எனவே உளவியலை ஓர் அறிவியலாகக் கருதலாம் .ஆய்வுக்கூடங்கள் ஏற்பட்டுள்ளன

மேலும் பரிசோதனை முறையும் புள்ளியியல் முறையும் அறிவியலுக்குரிய சிறப்பு முறைகளாகும்உளவியல் ஆராய்ச்சிக் .அவை உளவியலிலும் பயன்படுகின்றன .கும் தக்க

ஆய்வுக்கூடங்கள் ஏற்பட்டுள்ளனஉளவியலை .எனவே உளவியலை ஓர் அறிவியலாகக் கருதலாம் . அறிவியல் பிரிவில் சேர்ப்பினும், அதற்குச் சிலர் தடை கூறுவதுண்டுஅறிவியல் ., விலக்கின்மைக்கும் நியதிக்கும் அடங்கியதுஅதன்படி ., பருமைப்பொருள் )Concrete) பற்றிய நிகழ்ச்சிகளை நூற்றுக்கு நூறு சரியாக முன்கூட்டியே அறிவித்தல் இயலும் காரணம் அவற்றின் தன்மை மாறாமல் நிலைத்து நிற்பதாகும்ஆனால் மனிதனின் செயலும் எண்ணங்களும் ., என்றைக்கும் ஒரு நிலையில் நில்லா; மாறுந்தன்மையுடையவை மட்டுமல்ல; அவை தீராத சிக்கலுக்கும் உட்பட்டவைஎனவே ., மனிதனின் செயல், எண்ணம், நடத்தை ஆகியன பற்றி முன்கூட்டித் திட்டவட்டமாக நூற்றுக்கு நூறு சரியாகக் கூறுதல் இயலாது.

விஞ்ஞானப் பொருண்மையின்மையால், உளவியலை அறிவியற் பிரிவில் சேர்க்கலாகாது . என்பது இச்சாராரின் வாதமாகும் மற்றும் முழுமையாக பரிசோதனைகளையும், உளவியல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்த முடியாதுபொதுவாக ., உயிரிகள் பற்றிய ஆராய்ச்சிகளின் முடிவுகள், பொருளறிவியல், (Physics) வேதியியல் )Chemistry) போன்ற உயிரற்ற பொருள்கள், அவற்றின் இயக்கங்கள் ஆகியன பற்றி ஆராயும் அறிவியல்கள் போன்று முழுமையான நம்பகமான நிலையை எட்டுவது சிறிது கடினம்எனிலும்., இந்நூற்றாண்டில் உளவியலின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, அது முழுமையான அறிவியலாக வளர்ச்சிபெற்றுத் திகழும் சூழல் விரைவில் ஏற்படும்மற்றும் பிற அறிவுத்துறைகள் .பரிசோதனைமுறை இதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. மனிதனது இயல்பு பற்றிக் கண்டறிந்துள்ள உண்மைகளையும் தேவைப்பட்டபோது உளவியல் தனது ஆராய்ச்சிகளில் பயன்படுத்திக் கொள்கிறது.

**மாணாக்கர்களது பண்புகள் பற்றி அறிய உதவும் சில முறைகள்**

இன்றைய உளவியல் மற்றும் கல்வி உளவியல் ஆராய்ச்சிகளில் என்ன முறைகள் )Methods or Techniques) பின்பற்றப்படுகின்றனஇவற்றின் நிறை குறைகள் யாவை என்பன பற்றி ஓரளவு . அறிந்திருத்தல் ஆசிரிய– மாணாக்கனுக்குப் பயனுள்ளது மட்டுமன்று; பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சோதனைகளைச் செய்யவும், செயல்திட்டப் பதிவேடுகளைப் பூர்த்தி செய்யத் தேவையான விவரங்களைத் திரட்டவும் இவை உதவும்.

தம் அறிவியலின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் மனித நடத்தை பற்றிய விவரங்களைத் திரட்டித் தொகுக்க உளவியலறிஞர்கள் பல முறைகளைக் கையாளுகின்றனர்இவற்றுள் சில ., பிற அறிவியல் பிரிவுகளுக்கும் பொருந்துவனகல்வி உளவியல் .வேறு சில உளவியலுக்கே சிறப்பானவை . ஆராய்ச்சிகளிலும்இம்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன இம்முறைகள் ஒவ்வொன்றிலும் சில நல்லியல்புகளும், சிலகுறைபாடுகளும் காணப்படுகின்றன ஒரு உளவியளறிஞன் தனது ஆராய்ச்சிகளில் எந்த முறையைப் பயன்படுத்துகின்றான்என்பது ஆராயப்படும் பொருள்களினது . இயல்பையும், அவ்வறிஞனது திறமையையும் பொருத்ததாகும்.

**உற்றுநோக்கல் முறையும் அகநோக்கு முறையும்**

**(Observation Method & Introspection Method)**

பிறரது நடத்தையினைக் கூர்ந்து கவனித்து அறிதலே உற்று நோக்கல் எனப்படும்சிறு . குழந்தைகள், விலங்குகள் போன்றவற்றின் நடத்தையின் இயல்புகளை அறிய இம்முறை பயனுள்ளதாகும்கல் .வி உளவியலிலும் இம்முறை சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது.

பண்டைய முறையான அகநோக்கு முறையும் ஓரளவு உற்றுநோக்கல் முறையைச் சார்ந்தது எனலாம்அகநோக்கு முறையில் உளவியலறிஞன் தனது உள்ளத்துள் எழும் அனுபவங்களையும் ., நிகழும் மாறுதல்களையும், அவை நிகழும்போதே ஆராய்ந்து, அவற்றின் இயல்புகளை அறிய

முற்படுகிறான்உளவியல் ., தத்துவத்தின் ஒரு பிரிவாக இருந்தவரை இம்முறையே உளவியலின் முக்கிய முறையாக இருந்து வந்ததுஎடுத்துக்காட்டாக ., மனவெழுச்சிகளுள் ஒன்றான சினத்தின் இயல்புகளையறிய ஆவல்கொண்டுள்ள உளவியலறிஞன் தான் எப்பொழுதாவது, எக்காரணங்கொண்டேனும் சினமுறும்போது, அச்சினம் தனது உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கிறதுஉள்ளத்தின் இயல்பான நிலையில் எத்தகைய மாற்றங்களை அது . இக்கால .விளைவிக்கின்றது என்பன பற்றித் தன் அகக்கண் துணைகொண்டு நோக்குவான் உளவியலறிஞர்கள் இம்முறையைப் பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை; ஏனெனில், இதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

குறைபாடுகள் இருப்பினும் பிறமுறைகள் உதவா நிலையில் இம்முறை பயன்படும்பிற . ) முறைகளுடன் இணைத்தும்Supplement) இதனைப் பயன்படுத்துதல் கூடும்எனினும் இது . குழந்தைகளைப் பொறுத்தவரை பயன்படுத்த முடியாததொன்றாகும்.

பொதுவாக உற்றுநோக்கல் என்பது புறத்தேலிருந்து கொண்டு மற்றொருவரது செயல்களை ஆராய்வதாகும்ஒழுங்கமைதியுடன் கூடிய .இது எல்லா முறைகளுக்குமே அடிப்படைமுறையான . .உற்றுநோக்களில் குறிப்பிட்ட சிலபடிநிலைகள் உள்ளன1.உற்றுநோக்கல் நடத்தையைக் ) (குறிப்பிட்டு, 2.உற்றுநோக்கியதைப் பதிவு செய்தல் இது கவனத்துடனும் புறவயப்பட்ட ) .(நன்மையுடனும் அமைதல் வேண்டும்3.நடத்தையை வகைப்படுத்தி ஆய்வு செய்தல், 4. பொதுமைப்படுத்துதல்.

உற்றுநோக்கல், ஏறத்தாழ ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிவுகளைத் தரவேண்டுமாயின் சில முன்னேற்பாடுகளைக் )Precautions) கவனிக்க வேண்டியது இன்றியமையாதது.

1. தனியாக ஒருவர் உற்று நோக்கலில் ஈடுபட்டு முடிவுகளை எய்துவதைவிட உற்றுநோக்கல் குழுவினர் தனித்தனியாக உற்றுநோக்கிப் பின்னர் தம் குறிப்புகளை ஒப்பிட்டு முடிவுக்கு வருதல் சிறந்தது.
2. உற்றுநோக்கப்படுபவர் இயல்பாகச் செயல்படுவதற்கு உதவும் வண்ணம் உற்று நோக்குபவர் உற்றுநோக்கப்படுபவர் இடையே நல்ல உறவு இருத்தல் நன்று.
3. ஒருவேளையில் நடத்தையின் ஒரு பகுதியைக் கவனித்தல் நல்லது.
4. குழந்தைகளின் நடத்தையை நேரடியாக உற்றுநோக்கும்பொழுது அவர்களிடையே கூச்சத்தால் நடுக்கம் ஏற்படாதவாறு கவனித்துக்கொள்ள வேண்டும்இவ்வகை .யில் ஒளிப்பதிவு நாடாக்களும், படச்சுருள்களும் ஒருவழிக் கண்ணாடி அறைகளும் உதவுதல் கூடும்இவ்வகைக் . கண்ணாடிகளின் வழியே அறைக்கு வெளிப்புறம் உள்ள நோக்கர்களால் உள்ளே நிகழ்பவற்றைப் பார்க்க முடியுமே தவிர, அறையின் உள்ளேயேயுள்ளவரால் வெளியே பார்க்க இயலாதுசிறு குழந்த .ை நடத்தையை உற்றுநோக்க இத்தகைய அறைகள் இன்றியமையாதவை.
5. நேரடியாக உற்றுநோக்கலின்போது செய்தியினையும் உற்றுநோக்கர் ஊகத்தினையும் குழப்பிக் கொள்ளக்கூடாது.

**பரிசோதனை முறை )Experimental Method)**

பரிசோதனை முறை எல்லா அறிவியல் கவைகளுக்கும் பொதுவான ஒரு முக்கிய முறையாகும் . .இம்முறையால் பெறப்படும் முடிவுகள் நம்பகமானவை இவற்றைப் பிறகும் சரி பார்க்கலாம் இதனைக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட .பரிசோதனை என்பதும் உற்றுநோக்களின் ஒரு பிரிவேயாகும் ) உற்றுநோக்கல்Controlled observation) என்று கூறலாம்இயற்கைக்குத் தொடுக்கப்பட்ட விளா .வாக

)A question put to nature) பரிசோதனையினைக் குறிப்பிடலாம் ஒரு கோட்பாடு அல்லது கருதுகோளினைச் )Hypothesis) சரிபார்த்தலுக்காக ஓர் ஆராய்ச்சியாளனால் முயன்று உருவாக்கப்பட்ட நிலைமை பரிசோதனையாகும்இக்கோட்பாடு அல்லது கருதுகோள் காரண காரியத் . தொடர்பினைக் குறிப்பதாகப் பெரும்பாலும் இருக்கும்ஆராய்ச்சிக்குட்பட்ட நிகழ்ச்சியுடன் . தொடர்புடைய பல்வேறு காரணிகளை நம்மால் முழுமையாகக் கட்டுப்படுத்த இயலுமானால்தான் கூடங்களில் காணப்படும் -ஆய்வுக் .அவ்வாராய்ச்சியில் பரிசோதனை முறையைப் பயன்படுத்த முடியும் இவ்வாறு கார .பல்வேறு கருவிகள்ணிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சோதனையின் விளைவுகளை நுட்பமாக அளவிடுவதற்கும் உதவுகின்றன.

கல்வி உளவியல் பரிசோதனையின் எடுத்துக்காட்டாக நாம் குழந்தைகளது சாதனையைப் பாராட்டுதல், குறை கூறுதல் ஆகியன எவ்வாறு பாதிக்கின்றன என்பதனை ஆராய ஹர்லாக் என்பார் மேற்கொண்ட சோதனையைக் குறிப்பிடலாம்நான்காம் வகுப்பு ., ஆறாம் வகுப்புக் குழந்தைகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர் ஒவ்வொரு குழுவுக்கும் .15 நிமிடங்களில் செய்து முடிக்க வேண்டிய 30 கணக்குகள் கொடுக்கப்பட்ட 26 கணக்குகள் படிப்படியாக முன்னேற்றம் இருந்ததுஇரண்டாவது . குழுவினரிடையே படிப்படியாகக் கீழ்நிலை ஏற்பட்டதுமற்ற இரண்டு குழுவினரிடையேயும் . .குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் இல்லை

**பயன்கள்**

1. அறிவியலில் சிறப்பான முறையான பரிசோதனைமுறையை எந்த அளவுக்குப் பயன்படுத்த முடிகிறதோ அந்த அளவுக்கு அதன் முன்னேற்றமும் அமையும்.
2. அண்மையில் உளவியல் துறையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள புதிய கருத்துகளுக்கு அறிஞர்களால் திட்ட மிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்ட பல்வேறு சோதனைகளே - இன்று பரிசோதனை உளவியல் எனப்படும் சிறப்பு உளவியற் பிரிவு .அடிப்படையாகும் உளவியல் சோதனைகளுக் .தோன்றிப் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது கென்றே சிறப்பான சோதனைக் கருவிகள் உருவாக்கப் பட்டுள்ளன.
3. சென்ற நூற்றாண்டின் இறுதி வரை உளவியல் பெருமளவு அகநோக்கு முறையினைப் பயன்படுத்தி வந்ததன் விளைவாக உளவியல் அறிஞர்களிடையே பல போது கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன -ஆனால் இன்று பரிசோதனை முறை பரவலாகச் செயற் . படுத்தப்படுவதன் விளைவாக முக்கிய ஆராய்ச்சிப் பொருள்கள் பற்றிப் பெருமளவு கருத்து ஒற்றுமை தோன்றுகிறதுஒருவர் குறிப்பிடும் சோதனை முடிவுகளை வேறு ஓர் அறிஞர் . இதனால் இன்று .அத்தகைய சோதனையை திரும்பச் செய்து முடிவுகளைச் சரிபார்க்க இயலும் உளவியலும் கல்வி உளவியலும் பெருமளவு புறவயத் தன்மை பெற்று விளங்குகின்றன. இம்முறை உளவியல் ஆராய்ச்சியில் எங்கெல்லாம் பயன்படுத்தப்பட முடிகிறதோ அங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டு உளவியல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது.

**தனிவரலாற்று ஆராய்ச்சி முறை )Case Study Method)**

மனிதரிடம் காணப்படும் நடத்தைக் கோளாறுகளின் காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்க இம்முறை மிகவும் பயன்படும்ஒருவனுடைய தற்போதைய நிலைக்கு அவனுடைய முற்கால . இதை .வாழ்க்கை எவ்விதத்தில் காரணமாகிறது என்பது இம்முறையில் ஆராயப்படுகிறது ) மருத்துவமுறைClinical Method) என்றும் கூறுவர்பள்ளிகளி .ல் மாணாக்கர் சிலரிடம் காணப்படும் நெறி பிறழ்வு )Delinquency), பள்ளிப் பாடங்களில் பிற்பட்ட நிலை போன்றவற்றின் அடிப்படைக் காரணங்களை உணர்ந்து இத்தகைய நிலைகளைப் போக்க இம்முறை உதவுவதாகும்.

பள்ளிகளில் இம்முறையைப் பயன்படுத்தும்பொழுது கீழ்க்கண்ட படிகள் )Steps) காணப்படுகின்றன.

அமாணாக்கனுக்கு உதவி தேவைப்படுகிறது என்பதனைக் குறிப்பிடும் தொடக்க நிலை( .உற்று நோக்கல்

ஆமாணாக்கனது நடத்தைப் பிறழ்வினைப் போக்க அறிவுரை பகர்வோர் (, உளவியலார், உள மருத்துவர் போன்றோர் உதவியை நாடிப் பெறல்.

இமாணாக்கனது பிரச்சினைகளை ஆராய்தல்(, இப்படியில் அதன் தற்போதைய நிலை, முந்திய வரலாறு ஆகியம் மாணாக்கலச இரண்டும் இணைந்த வகையில் ஆராயப்படும்.

ஈஇவ்வாராய்ச்சியின் நடத்தைக்குப்பின் அமைந்துள்ள காரணிகள்(, ஊக்கிகள் போன்றவற்றைப் பற்றி முடிவெடுத்தல்.

உ) தொடர்வேலை (Follow up work), தேவைப்பட்டால் விளைவு களை மீண்டும் ஆராய்ந்து புதிய கோட்பாடுகளை வகுத்தல்.

மருத்துவ முறையும், தனி வரலாற்று ஆராய்ச்சி முறையும் நோக்கத்தைப் பொறுத்தவரை இணைந்தவை தனி வரலாற்று ஆராய்ச்சி முறையினை ஆசிரியரும் சிறிது பயிற்சியுடன் வருப்பறையில் பின்பற்றுதல் எளிதுஆனால் ., மருத்துவ முனையினைப் பயன் எழும் வகையில் செயற்படுத்தத் தனிப்பயிற்சி அதிகம் தேவைப்படும்.

**சமூக அளவியல் முறைகள் )Sociometry)**

பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிலும் பல மாணாக்கர் கல்வி பயிலுவர்இவர்களிடையே . நட்பு .காணப்படும் சமூகத் தொடர்பின் இயல்பு பலவகைப்பட்டதாகவிருக்கும், புறக்கணிப்பு, வெறுப்பு, ஒதுங்கி வாழ்தல் போன்றன இவற்றுள் சிலவாம் மாணாக்கர்களது சமூக வளர்ச்சிக்குத் . )Social Developtmenit) துணை செய்ய இத்தகைய சமூகத் தொடர்புகள் பற்றிய அறிவு ஆசிரியருக்கு இன்றியமையாததாகும்களையும் இவற்றுக்குப் பின் அமையும் -சமூகத் தொடர்பு . ) மனப்பான்மைசுளையும்social Attitudes) ஆராய்ந்து அளந்தறிய இன்று சமூக உளவியலறிஞர்கள், சமூகவியலறிஞர்கள் ஆகியோரால் சில நுண்முறைகள் உருவாக்கப்பட்டுள்ளனஇம்முறைகள் பற்றிய . பிரிவு'சமூக அளவியல்' எனப்படும்.

ஒரு மாணாக்கன் தன் பள்ளித் தோழர்கள் பற்றி என்ன நினைக்கிறான்அவர்களுள் யாரை . விரும்புகிறான்யாரை வெறுக்கிறான் என்பன பற்றி ஆசிரியர் அறிய வகுப்பறையில் பல வாய்ப்புகள் . பள்ளித் தேர்தல்கள் .ஏற்படுகின்றன, பாடி வாழ்க்கைக் குழுக்களுக்கான தேர்தல்கள் போன்ற பல நிகழ்ச்சிகளும் மாணாக்கர்களது சமூக விருப்பங்களை வெளிப்படுத்துவனவாம்இவை தவிர ., 'மாணாக்கர் மதிப்பீட்டு நுண்முறை )Appraisal) எனப்படும் சமுக அளவியல் முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது.

**செயல் ஆராய்ச்சி )Action Research)**

ஆசிரியரது பணிகளும் பொறுப்புகளும் இன்று பெருகியுள்ளனஅவரிடம் பல நற்பண்புகளும் தொழில் . இன .திறன்களும் எதிர்பார்க்கப்படுகின்றன◌ைறைய சிக்கல் மிகுந்த தொழில் நுட்ப உலகில் ஆசிரியப் பணியானது மாணாக்கர்களது மனத்தில் வெறும் பாடப்பொருன் விவரங்களைப் புகுத்துதல் என்பதுடன் முடிவடையும் ஒரு செயல்ன்று மாறிவரும் உலகில், அந்த மாற்றம் பெரும் சூழ்நிலைக்கு ஏற்ற அறிவு திறமைகள் புதிய அணுகுமுறைகள், தன்மனப்பான்மைகள் சமூக ஒழுக்கப் பண்புகள் ஆகியவற்றை மாணாக்கர்கள் கற்கும் வகையில் பள்ளிக் கல்வி அமைப்பினை ஆசிரியர் உருவாக்க வேண்டிய கட்டாயம் இன்று எழுந்துள்ளதுசமுதாய மாற்றங்கள் மாணாக்கர் பள்ளி நுழைவு . ) நடத்தையின்Entering Behaviour) தன்மையைப் பெரிதளவு பாதித்து வகுப்பறையில் ஆசிரியர்

எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளின் எண்ணிக்கையையும் தன்மையையும் அதிகப்படுத்தியும் கடினமானதாகவும் ஆக்கியுள்ளது.

கற்பித்தலிலும் பள்ளி மேலாண்மையிலும் புதிய முறைகள், உத்திகள் ஆகியவற்றை ஆசிரியர் உருவாக்கிச் செயற்படுத்த வேண்டிய நிலைமையுடன் ஒவ்வொரு மாணாக்களது சமூகபொருளாதாரப் - பண்பாட்டு நிலைமையையும் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் ஆசிரியருக்கு பிற நாட்டில் செயற்படுத்தப்படும் கல்வி முறையினை நமது தேவைக்கும் .இன்று ஏற்பட்டுள்ளது, வசதிகளுக்கும் ஏற்ப ஆசிரியர் மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளதுஇத்தகைய . பல்வேறு நிலைமைகளை வெற்றியுடன் எதிர்கொள்ள ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணியுடன் .ஆராய்ச்சிப் பணியையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது

கல்விக்கூடங்கள் இன்று பெரும் தொழில் நிலைவை அடைந்துள்ளனஇந்தகைய செயல் . தொடர் ஆராய்ச்சிகள் கற்பித்தலில் ஆசிரியரது திறனை வளர்த்து, அவரது பொறுப்புகளை ஆராய்ச்சி மனப்பான்யுடன் அணுக உதவுகிறதுமேலும் .,பின்னர், திட்டமிட்ட கல்வி ஆராய்ச்சிகளில் ஈடுபடவும் . பல்வேறு உளவியல் முறைகளால் .செயல் தொடர் ஆராய்ச்சிகள் தொடக்கப்படிகளாக அமைகின்றன விவரங்கள் மாணாக்கர் பற .திரட்டப்படும்றிய திரள்பதிவுகளை )Cumalative Records) உருவாக்குவதற்கும்) தனி வரலாற்றுப் பதிவுகளைத் .case History) தொகுப்பதற்கும் உதவுகின்றது.

**நிறைவாக**

அறிவியலின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் மனித நடத்தை பற்றிய விவரங்களைத் திரட்டித் தொகுக்க உளவியலறிஞர்கள் பல உளவியல் முறைகளான உற்றுநோக்கல் முறை, அகநோக்கு முறை, பரிசோதனை முறை, தனிவராற்று ஆராய்ச்சி முறை, சமூக அறிவியல் முறை, செயல் ஆராய்ச்சி முறை மூலம் கையாளுகின்றனர்இவற்றுள் சில ., பிற அறிவியல் பிரிவுகளுக்கும் பொருந்துவனவேறு சில . கல்வி உளவியல் ஆராய்ச .உளவியலுக்கே சிறப்பானவைசிகளிலும் இம்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன இம்முறைகள் ஒவ்வொன்றிலும் சில நல்லியல்புகளும், சிலகுறைபாடுகளும் காணப்படுகின்றன ஒரு உளவியறிஞன் தனது ஆராய்ச்சிகளில் எந்த முறையைப் பயன்படுத்துகின்றனர் என்பது ஆராயப்படும் பொருள்களினது இயல்பையும், அவ்வறிஞனது திறமையையும் பொருத்ததாகும்இவ்வுளவியல் முறைகளுன் முக்கியமான பங்கினை வகிக்கின்றன . .என்பதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகிறது

**துணைநூற்பட்டியல்**

1. கண்ணதாஸ், பெ).2007), பாவை நூல்களில் உளவியலும் அறிவியலும், சென்னை பாவை : .பப்ளிகேஸ்ஷன்ஸ்
2. சந்தானம்,எஸ், கணபதி ,வி).2002), கல்வி உளவியல், சென்னை : சாந்தா பப்ளிஷர்ஸ்.
3. பழனிவேலு, ஞா .Emotional Intelligence, Nathi publishers, 2010 ISBN 978-93-80505-06-0
4. பழனிவேலு, ஞா .Personality Theories and Assessment, Neelkamal Publications